## யூன் – 06 – வியாழன்

### புனிதநோபர்ட்

### “நீர் எனக்கு அளித்த மாட்சியை நான் அவர்களுக்க அளித்தேன்’’ (யோவன் 17:22)

---

**முதல் வாசகம் : திருத்தூதர் பணி 22: 30,23:6 – 11**

அக்காலத்தில் யூதர்கள் பவுல்மீது என்ன குற்றம் சுமத்துகிறார்கள் என்பதை உறுதியாக அறிய ஆயிரத்தவர் தலைவர் விரும்பினார். எனவே, மறுநாள் தலைமைக் குருக்களும், தலைமைச் சங்கத்தினர் அனைவரும் கூடிவருமாறு அவர் ஆணை பிறப்பித்துப் பவுலை சிறையிலிருந்து கொண்டு வந்து அவர்கள் முன் நிறுத்தினார். அவர்களுள் ஒரு பகுதியினர் சதுசேயர் என்றும், மறுபகுதியினர் பரிசேயர் என்றும் பவுல் அறிந்து, ”சகோதரரே! நான் ஒரு பரிசேயன். பரிசேய மரபில் பிறந்தவன் இறந்தோர் உயிர்த்தெழுவர் என்னும் எதிர்நோக்கின் பொருட்டு விசாரிக்கப்படுகிறேன்” என்று தலைமைச் சங்கத்தின் முன் உரத்த குரலில் கூறினார்.அவர் இப்படிச் சொன்னபோது பரிசேயருக்கும் சதுசேயருக்குமிடையே வாக்குவாதம் எழுந்தது. எனவே அங்குத் திரண்டிருந்தோர் இரண்டாகப் பிரிந்தனர். சதுசேயப் பிரிவினர் வானதூதரும் உயிர்த்தெழுதல், ஆவிகள் ஆகியனவும் இல்லை என்று கூறிவந்தனர் பரிசேயர் இவையனைத்தும் உண்டென ஏற்றுக் கொண்டனர்.அங்குப் பெருங்கூச்சல் எழுந்தது. பரிசேயப் பிரிவினைச்சேர்ந்த மறைநூல் அறிஞருள் சிலர் எழுந்து, ”இவரிடம் தவறொன்றையும் காணோமே! வானதூதர் ஒருவரோ, ஓர் ஆவியோ இவரோடு பேசியிருக்கலாம் அல்லவா!” என வாதாடினர். வாக்குவாதம் முற்றவே அவர்கள் பவுலைப் பிய்த்தெறிந்து விடுவர் என ஆயிரத்தவர் தலைவர் அஞ்சி படைவீரரை வரச்சொல்லி அவரை அவர்கள் நடுவிலிருந்து பிடித்துக் கோட்டைக்குள் கூட்டிக்கொண்டு செல்லுமாறு ஆணை பிறப்பித்தார்.மறுநாள் இரவு ஆண்டவர் அவரருகில் நின்று, ”துணிவோடிரும் எருசலேமில் என்னைப்பற்றி சான்று பகர்ந்தது போல உரோமையிலும் நீர் சான்றுபகர வேண்டும்” என்றார்.

**பதில்பாடல் :** இறைவா! என்னைக் காத்தருளும், உம்மிடம்
நான் அடைக்கலம் புகுந்துள்ளேன்.

**நற்செய்தி : யோவான்17 : 20 - 26**

அக்காலத்தில்இயேசு வானத்தை அண்ணார்ந்து பார்த்து வேண்டியது :“தூய தந்தையே! என் சீடர்களுக்காகமட்டும் நான் வேண்டவில்லை. அவர்களுடைய வார்த்தையின் வழியாக என்னிடம் நம்பிக்கை கொள்வோருக்காகவும் வேண்டுகிறேன். எல்லாரும் ஒன்றாய் இருப்பார்களாக! தந்தையே, நீர் என்னுள்ளும் நான் உம்முள்ளும் இருப்பதுபோல் அவர்களும் ஒன்றாய் இருப்பார்களாக! இதனால் நீரே என்னை அனுப்பினீர் என்று உலகம் நம்பும்.நாம் ஒன்றாய் இருப்பதுபோல் அவர்களும் ஒன்றாய் இருக்குமாறு நீர் எனக்கு அருளிய மாட்சியை நான் அவர்களுக்கு அளித்தேன்.இவ்வாறு, நான் அவர்களுள்ளும் நீர் என்னுள்ளும் இருப்பதால் அவர்களும் முழுமையாய் ஒன்றித்திருப்பார்களாக. இதனால் நீரே என்னை அனுப்பினீர் எனவும் நீர் என்மீது அன்பு கொண்டுள்ளதுபோல் அவர்கள்மீதும் அன்பு கொண்டுள்ளீர் எனவும் உலகு அறிந்து கொள்ளும்.”தந்தையே, உலகம் தோன்றுமுன்னே நீர் என்மீது அன்புகொண்டு எனக்கு மாட்சி அளித்தீர். நீர் என்னிடம் ஒப்படைத்தவர்கள் என் மாட்சியைக் காணுமாறு அவர்களும் நான் இருக்கும் இடத்திலேயே என்னோடு இருக்க வேண்டும் என விரும்புகிறேன்.நீதியுள்ள தந்தையே, உலகு உம்மை அறியவில்லை. ஆனால் நான் உம்மை அறிந்துள்ளேன். நீரே என்னை அனுப்பினீர் என அவர்களும் அறிந்து கொண்டார்கள்.நான் அவர்களோடு இணைந்திருக்கவும் நீர் என்மீது கொண்டிருந்த அன்பு அவர்கள்மீது இருக்கவும் உம்மைப்பற்றி அவர்களுக்கு அறிவித்தேன் இன்னும் அறிவிப்பேன்” என்றார்.

**தியானம்:** நாம் வாழுகின்ற உலகில் நன்மை செய்வது என்பதும் பிறரது வாழ்வில் அக்கறை கொள்வது என்பதும் வெகு சிலருக்கே உரித்தான பண்பு. இறைமகன் இயேசு நமக்காக அனைத்தையும் இழந்து நமக்காய் வாழ்ந்தவர். வாழ்வின் இறுதி எல்லைவரை வாழத் துடிப்பவர். நற்செய்தியில் இயேசுவின் இறுதிப் பகுதியையும், அதிலே இயேசுவின் அன்பையும், தந்தை மீது கொண்டிருந்த ஒருமைப்பாட்டையும், தன்னிடம் ஒப்படைக்கப்பட்டவர்களுக்காக அவர்களது ஒற்றுமைக்காக, அவர்கள் அழிவுபடாமல் காக்கப்பட வேண்டுமென்று வேண்டினார். நாம் இறைவனோடு இருப்பது இறைவனின் விருப்பம். அவர் நமக்காக மன்றாடுகிறார். நாமும் நம்முடைய வாழ்வில் நமக்குக் கொடுக்கப்பட்ட கடமைகளை சரிவர செய்து இறைவனின் மாட்சிமை விளங்க சாட்சிகளாக வாழ்வோம். இறைவார்த்தையை கேட்பதோடு மட்டுமல்ல அதை உள்ளதத்திலே பதித்து அதன்படி நடப்பவர்கள் இயேசுவின் மீது நம்பிக்கை கொண்டவர்கள். இவர்கள் ஒற்றுமையுடனும், மகிழ்ச்சியுடனும் உள்ளதை இல்லாதவர்களோடு பகிர்ந்து வாழும் பொழுது இயேசுவுக்கு சான்று பகிர்கின்றனர். நாம் நமக்காக மட்டுமல்ல நம்மோடு வாழும் அனைவருக்காகவும் முக்கியமாக இறைபணியில் நிறைவைக் காணும் அனைவருக்காகவும் செபிப்போம்.